## திராவிடக் கருத்தியல்

மெய்நிகர் பன்னாட்டுக்கருத்தரங்கம்

(இனம், மொழி, தேசியம் குறித்த வரையறைகளும் விவாதங்களும்)

### பதிவுப்படிவம்

பெயர் :

கல்வித்தகுதி :

பணிபுரியும்/பயிலும்

நிறுவன முகவரி :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

மின்னஞ்சல் :

கட்டண விபரம் :

தொகை :

வங்கியின் பெயர் :

கிளையின் பெயர் :

வரைவோலை எண் :

நாள் :

திரு/திருமதி_______________________________________

ஆகிய நான்_________________________________________

___________________________________________________

எனும் தலைப்பில் அமைந்த ஆய்வுக் கட்டுரையை மின்னஞ்சலில் அனுப்பியுள்ளேன். கருத்தரங்க விதிமுறைகள் அனைத்தையும் பின்பற்றுவேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : கையொப்பம்

(இப்படிவத்தை நகலெடுத்தும் பயன்படுத்தலாம்)

(கட்டுரையோடு கட்டணரசீது, பதிவுப்படிவம் போன்றவற்றை dravidancnc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்)

## ஒங்கிணைப்பாளர்கள்

முனைவர் ப.கமலக்கண்ணன்
தமிழ்த்துறைத் தலைவர்,
சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு.

முனைவர் செ.சதீஸ்குமார்
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி

முனைவர் ர.சுரேஷ்
முதன்மை பதிப்பாசிரியர்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

## இணை ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் சி.அங்கயற்கண்ணி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சிக்கய்ய நாய்க்கர், ஈரோடு

பேரா.க.இராக்கு
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு

முனைவர் இரா.விஸ்வநாதன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு

## கருத்தரங்க அமைப்புக்குழுவினர்

முனைவர் கருநல் பன்னீர்செல்வம்
தமிழ்த்துறைத் தலைவர்,
ஈரோடு கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.

முனைவர் இரா.மல்லிகா
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழக முதுநிலை விரிவாக்கம்
மற்றும் ஆராய்ச்சி மையம்
ஈரோடு

முனைவர் அ.குருமூர்த்தி
உதவிப் பேராசிரியர்
ஸ்ரீ வாசவி கல்லூரி (சுயநிதி), ஈரோடு

IOR PRESS

### சிக்கய்யநாயக்கர் கல்லூரி

(தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் 'A' சான்று பெற்றது)

### தமிழ்த்துறை – திராவிட இயக்க ஆய்வுமையம்

ஈரோடு

### பாரதியார் பல்கலைக்கழக முதுகலைபட்ட மேற்படிப்பு விரிவாக்கம் & ஆராய்ச்சி மையம்

### பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி

ஈரோடு

### ஸ்ரீ வாசவி கல்லூரி (சுயநிதி)

ஈரோடு

### சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

(UGC – Care Listed Journal)

இணைந்து நடத்தும்

மெய்நிகர் பன்னாட்டுக்கருத்தரங்கம்

# திராவிடக் கருத்தியல்

(இனம், மொழி, தேசியம் குறித்த வரையறைகளும் விவாதங்களும்)

செப்டம்பர் *16-17 2021*

## அறிவிப்பு மடல்

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு
– தந்தை பெரியார்

பேரன்புடையீர்,

வணக்கம்.

பொன்விழாச் சிறப்பைப் பெற்ற எமது சிக்கய்யநாயக்கர் கல்லூரி, கடந்த 50 ஆண்டுகளில் தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களையும், அதிகாரிகளையும் உருவாக்கிய பாரம்பரியக் கல்விப்புலமாகும். 1954 இல் தந்தைப்பெரியாரால் தொடங்கி வைக்கப்பட்ட இந்தக்கல்லூரி ஏழை எளிய கிராமப்புற மாணவ மாணவிகளின் கல்விக்கான கலங்கரை விளக்கமாகும். தற்போது சுமார் 1500 மாணவ மாணவிகளுடன் தொன்மை இயல்பு குன்றாமல் பங்காற்றி வரும் எமது கல்லூரியின் தமிழ்த்துறை மொழி, இனம், பண்பாடு சார்ந்த பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. அதன் பகுதியாக திராவிட இயக்க ஆய்வுமையம் தொடங்கப்பட்டு தென்னிந்த அரசியலில், பண்பாட்டில், பொருளாதாரத்தில் அதன் அளப்பரிய பங்களிப்புகளை ஆய்வு செய்து வெளிப்படுத்தி வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே எமது கல்லூரித் தமிழ்த்துறை மற்றும் திராவிட இயக்க ஆய்வு மய்யமும், பாரதியார் பல்கலைக்கழக முதுகலைப்பட்ட மேற்படிப்பு விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மையம், ஈரோடு பாரதிதாசன் கலை அறிவியல்கல்லூரி, ஈரோடு ஸ்ரீ வாசவி கல்லூரி (சுயநிதி), முதலிய கல்வி நிறுவனங்ளோடும் சர்வதேசத் தமிழ் ஆய்விதழுடனும் (UGC Care Listed Journal E-ISSN 2852-1113) இணைந்து திராவிடகருத்தியலை அடிப்படையாகக் கொண்டு இனம், மொழி, தேசியம் குறித்த வரையறைகளும் விவாதங்களும் தமிழ்ச்சமூகத்தில் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து வரன்முறைப்படுத்தும் விதமாக "திராவிடக்கருத்தில்" எனும் ஆய்வுப்பொருண்மையில் ஆய்வுக்கருத்தரங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இக்கருத்தரங்கிற்கு கட்டுரைகளையும் தங்களுடைய மதிப்புமிகு பங்களிப்பையும் நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், இந்தியாவின் முதல் Google Scholar, CrossRef indexed மற்றும் DOI எண்பதிவு பெற்றதமிழ் ஆய்விதழாகவும், பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆய்விதழாகவும், பல்வேறு ஆய்வு மேம்பாட்டுப் பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுத்து தொடா்ந்து நடத்திக் கொண்டிருக்கின்ற ஆய்விதழாகவும் இருந்துவருகின்றது. அத்துடன் தமிழாய்வுகளை உலகத்தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் ஆய்வுப்புல வல்லுநர்களின் மதிப்பீட்டைப் பெற்று தரமான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுதல், அவற்றை உலகளாவிய பயன்பாட்டிற்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்றவகையில் எண்ணிமப்படுத்துதல் (digitize), குறுந்திட்ட ஆய்வுகளுக்கு நிதியுதவி அளித்தல் முதலிய பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. மேலும் பன்னாட்டுத் தமிழறிஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் ஆய்வுவளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ஆய்வாளர்களுக்கும், ஆய்வுப்புல அறிஞர்களுக்குமிடையே ஆய்வுசார்ந்து உரையாடுவதற்கும் விவாதிப்பதற்குமான வாய்ப்புகளையும், அதற்கான சூழலையும் ஏற்படுத்தித் தருதல், தமிழ்ச் சூழலில் இதுவரையிலான ஆய்வுப்போக்குகளையும் அவற்றின் போதாமைகளையும் மதிப்பிட்டு, புதியகளங்களில் புதிய அணுகுமுறைகளில் ஆய்வு செய்ய ஆய்வாளர்களை ஊக்குவித்தல், ஆய்வுத்திறன் மேம்பட்ட செழுமைமிக்கதொரு ஆய்வாளச்சமூகத்தை உருவாக்குதல் போன்ற பல்வேறு ஆய்வுச் செயல்பாடுகளில் அதிக அக்கறையோடு முன்னிற்கின்றது. இதன் தொடர்ச்சியாக இக்கருத்தரங்கை புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களோடு இணைந்து நடத்தத் திட்டமிட்டுள்ளது.

## ஆய்வுக்களங்கள்

இந்திய வரலாற்றை எழுதுவதிலும், இந்திய சமூகங்கள் குறித்த ஆய்வுகளிலும் ஐரோப்பியர் வருகைக்குப் பிறகான பார்வைக்கோணங்கள் பல புதிய திசைவழிகளையும் கருதுகோள்களையும் உருவாக்கித் தந்துள்ளன. அதனை அடியொற்றி மேலெழுந்த அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தளங்களிலான இனம் மொழி தேசியம் குறித்த உரையாடல்களும் விவாதங்களும், புதிய மெய்மைகளும் கண்டடைவுகளும் நிகழ்த்தப்படக் காரணங்களாக அமைந்திருந்தன. இதன் விளைவாக, பல்வேறு சிந்தனைத் தொகுதிகளையும் அறிவுப்பாரம்பரியங்களையும் கொண்ட இந்திய சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகள் மேலாதிக்க கருத்தியலுக்கும் விடுதலைக் கருத்தியலுக்குமான பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டு அது ஆரிய, திராவிட கருத்தியலாக தத்துவார்த்த வடிவம் பெற்று சகலமட்டங்களிலும் தொழிற்பட்டிருக்கின்றது. இந்நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக, அதிகாரச் செயல்பாடுகளை எதிர்த்து மாற்றுச்சிந்தனைகளை, மாற்றரசியலை மிகத்தீவிரமாக முன்னெடுப்பதற்குரிய வலுவான கோட்பாட்டுப் பின்புலமாக இருந்தது திராவிடக்கருத்தியல் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. வரலாறு, பண்பாடு, சமயம், சாதியம், தேசியம், மொழி, இனம், கலை, இலக்கியம், நிலவியல், அறவியல், அரசியல், அழகியல், மெய்யியல் என திராவிடக்கருத்தியலின் தாக்கம் பெறாத துறைகள் இன்று இல்லை எனலாம். இத்தகு சூழலில் திராவிடம் என்பதை அடிப்படையாகக் கொண்டு இனம், மொழி, தேசிய அடையாளங்களை வரையறுப்பதும் அவற்றில் எழும் சிக்கல்களை விவாதிப்பதும் தற்கால ஆய்வுப்பரப்பில் தேவையான ஒன்றாக உள்ளது. எனவே திராவிடக்கருத்தியல் எனும் ஆய்வுப்பொருண்மையில் கருத்தரங்கம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வாளர்கள் திராவிடக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட சமூக, அரசியல், பண்பாடு என எதைப்பற்றியும் ஆய்வு செய்யலாம்.

## கட்டுரையாளர்கள் கவனத்திற்கு,

1. ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில் (Word document) A4 தாளில் 1.15 இடைவெளியுடன் 9 அச்சுப்புள்ளியில் லதா யுனிகோடு (Unicode) எழுத்துருவில் கணினிவழி தட்டச்சுசெய்து dravidancnc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவேண்டும்.
2. கட்டுரைத் தலைப்பு, கட்டுரையாளர் பெயர், பதவி, துறையின்பெயர், கல்லூரி / பல்கலைக்கழகம். நகரம், அஞ்சல் குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியன கட்டாயம் இடம்பெற வேண்டும்.
3. ஆய்வுச்சுருக்கம், குறிச்சொற்கள், முன்னுரை, ஆய்வுரை (துணைதலைப்புகளுடனும், விவாதங்களுடனும்) ஆய்வுபயன்கள், முடிவுரை ஆகியன உள்ளடக்கியதாக கட்டுரையின் வடிவம் அமைந்திருக்க வேண்டும்
4. மேற்கோள்கள் எங்கெங்கு எடுத்தாளப்படுகின்றனவோ அந்தந்த இடங்களிலேயே ஆசிரியர்பெயர், ஆண்டு (சுவாமிநாதஜயர், உவே., 1984) மட்டும் குறிப்பிட வேண்டும்.
5. மேற்கோள்கள் விபரங்கள் (ஆசிரியர்பெயர், (வெளிவந்த ஆண்டு) புத்தகத்தின்பெயர், (வெளிவந்த பதிப்புவரிசை) வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழுமுகவரி.) கட்டுரையின் இறுதியில் இடம்பெற வேண்டும்
6. ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் வேண்டும். இதற்கு முன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாக இருக்க வேண்டும்.
7. கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும். (கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் தமிழில் தரலாம். ஆங்கில மொழி பெயர்ப்பு கட்டாயம் அல்ல)
8. கருத்தரங்கநாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக்கட்டுரைகளை வாசித்தளிக்க வேண்டும். அவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
9. சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC – Care Listed Journal) வல்லுநர்குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்படும்.
10. சிறப்பிதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகள், அச்சுப்பிரதியாகவும் (PRINTED BOOK) கட்டுரையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## கருத்தரங்கக் கட்டணம்

| | |
|---|---|
| பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள்: | ரூ 1800 /- |
| பார்வையாளர்கள் | : ரூ 300 /- |
| வெளிநாட்டவர் (USD) | : $ 35 |

### ஆய்வுக்கட்டுரைக்கானத் தொகையை இணையவழியில் செலுத்த

| | |
|---|---|
| SB A/C NO | : 019801000031527 |
| IFSC CODE | : IOBA0000198 |
| BANK NAME | : INDIAN OVERSEAS BANK |
| BRANCH | : KAVINDAPADI |
| A/C HOLDER NAME | : C. Satheeshkumar |

கட்டண விபரங்களையும், கட்டுரைகளையும், பதிவுப்படிவத்தையும் இணைத்து dravidancnc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஆகஸ்ட் 31–ஆம் தேதிக்குள் அனுப்பவும்.

கட்டுரையில் ஆசிரியர் பெயர், பதவி, முழு முகவரி, தொடர்பு என், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட விபரங்களை கட்டாயம் பதிவு செய்யவும்.